**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A**.75/2017, **E.P**.91/1997, **O.S**.193/1996

**2018 ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் புஷ்பா வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

**<u>எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 18ம் சாட்சி (**PW**18) (3.09.2018) இடம் பிரச்சனை சம்மந்தமாக நான் மனு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து 30 ஆண்டுகளுக்கு முன்பு சுவாதீனம் சென்றேன். நான் குடிசை போட்ட சமயத்தில் தாவாச்சொத்தில் சுமார் 160 குடும்பங்கள் குடிசை போட்டு இருந்தார்கள். எனது சொந்த ஊர் காங்கேயம் அருகாமையில் உள்ள கந்தாம்பாளையம் ஆகும். தாவாச்சொத்தில் குடிசை போட யார் தெரிவித்தார்கள் என்றால் யாரும் தெரிவிக்கவில்லை நான் சுயமாக குடிசை போட்டேன். முனியனை நான் பார்த்தது இல்லை. தாவாச்சொத்து சம்மந்தமாக ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச்சொத்தில் நான் குடிசை போட்ட காலக்கட்டத்தில் முருகேசன் தாவாச்சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். முருகேச கவுண்டர் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தை பொறுத்து 30.4.1990 ல் அசல் வழக்கு எண் 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 193/96 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் நான் 134 ஆம் பிரதிவாதி என்றும் எனக்கு வழக்கு அழைப்பாணை அனுபப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து

வழக்காடினேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் மனு சொத்து முருகேச கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் காலி செய்து முருகேச கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 ல் 77 மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் உள்ளது. கடந்த 1 வருடத்திற்கு முன்பு தாவாச்சொத்தினை சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்ற அமினா தாவாச்சொத்திற்கு வந்தார் என்றால் சரிதான். பாப்பம்மாள், கிருஷ்ணாசாமி ஆகியோர்களை எனக்கு தெரியாது. மற்ற மனுதாரர்கள் தங்களுக்கு எதிராக பிறபிக்கப்பட்ட ஒரு தலை பட்ச உத்தரவினை ரத்து செய்யுமாறு E.A.14/2017 தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் மீது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சீராய்பு மனுவிற்கு பின்னிட்டுதான் இம்மனுவினை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். நான் குடிசை போட்டு 1 வருட காலம் கழித்து பட்டா வழங்கப்பட்டது. பட்டா வழங்குமாறு அனைவரும் சேர்ந்து தான் மனு செய்தோம். மனு தாக்கல் செய்த பின்னர் 6 மாதங்கள் கழித்து பட்டா வழங்கினார்கள். தாவாச்சொத்தில் நான் குடிசை போட்ட காலக்கட்டத்தில் கிணறு இருந்தது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.193/1996 தீர்ப்பின் படி தாவாச்சொத்து முருகேசனுக்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகள் சுவாதீனம் கொடுக்கவேண்டும் என தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால் சரிதான், நாங்கள் மேற்படி தீர்ப்பை ஏற்கவில்லை. தனலெட்சுமிக்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ளோம். முருகேசன் இறப்பதற்கு முன்பு தாவாச்சொத்தை பொறுத்து ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. முருகேசன் தாவாச்சொத்தை பொறுத்து 2 மற்றும் 3 ஆம்

எதிர்மனுதாரர்கள் பெயரில் உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆவணம் எழுதி வைத்துள்ளதாக தெரிவித்தார்கள் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனது பிரமாண வாக்கு மூலத்தில் என் குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு 1991 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் கால கட்டத்தில் முருகேச கவுண்டர் ஒரு வருட காலத்திற்கு முன்பே இவ் அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டார் என்றும், வழக்கு நிலுவையில் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு முருகேச கவுண்டர் தான் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அசல் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் அதே காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பு வரி ரசீதுகள் இம்மனுவிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் மேற்படி ரசீதுகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இவ் அசல் வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தை சுவாதீனம் ஒப்படைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும், வீண் கால தாமதம் செய்ய வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A**.75/2017, **E.P**.91/1997, **O.S**.193/1996

**2018 ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் சாந்தாமணி வயது

த.பெ/க.பெ மருதாசலம் மதம்

முகவரி தொழில்

**<u>எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 19 ம் சாட்சி (**PW**19) (3.09.2018) இடம் பிரச்சனை சம்மந்தமாக நான் மனு தாக்கல் செய்துள்ளேன். தாவாச்சொத்து முனியப்பன் பெயரில் இருந்தது. நான் முனியப்பனை நேரிட்டு பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச்சொத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து 30 ஆண்டுகளுக்கு முன்பு சுவாதீனம் சென்றேன். நான் குடிசை போட்ட சமயத்தில் தாவாச்சொத்தில் சுமார் 150 குடும்பங்கள் குடிசை போட்டு இருந்தார்கள். தாவாச்சொத்தில் நான் குடிசை போட்ட காலக்கட்டத்தில் முருகேசன் தாவாச்சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். தாவாச்சொத்து சுமார் 4 1/2 ஏக்கர் ஆகும். தாவாச்சொத்தில் நான் குடிசை போட்ட காலக்கட்டத்தில் கிணறு இருந்ததா என்றால் இல்லை. தாவாச்சொத்தில் குடிசை போட்ட காலக்கட்டத்தில் முருகேசன் பிரச்சனை செய்தாரா என்றால் பிரச்சனை செய்யவில்லை. முருகேச கவுண்டர் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தை பொறுத்து 30.4.1990 ல் அசல் வழக்கு எண் 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 193/96 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் நான் 159 ஆம் பிரதிவாதி என்றும் எனக்கு வழக்கு

அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து வழக்காடினேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் மனு சொத்து முருகேச கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் காலி செய்து முருகேச கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 ல் 94 மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் உள்ளது. கடந்த 2 வருடத்திற்கு முன்பு தாவாச்சொத்தினை சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்ற அமினா தாவாச்சொத்திற்கு வந்தார் என்றால் சரிதான். பாப்பம்மாள், கிருஷ்ணாசாமி மற்றும் குமரன் ஆகியோர்களை எனக்கு தெரியாது. மற்ற மனுதாரர்கள் தங்களுக்கு எதிராக பிறபிக்கப்பட்ட ஒரு தலை பட்ச உத்தரவினை ரத்து செய்யுமாறு E.A.14/2017 தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் மீது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சீராய்பு மனுவிற்கு பின்னிட்டுதான் இம்மனுவினை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்கு மூலத்தில் என் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் குடிசை போட்டு 1 வருட காலம் கழித்து பட்டா வழங்கப்பட்டது. பட்டா வழங்குமாறு அனைவரும் சேர்ந்து தான் மனு செய்தோம். முருகேசன் தாவாச்சொத்தை பொறுத்து 2 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள் பெயரில் உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு 1991 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் கால கட்டத்தில் முருகேச கவுண்டர் ஒரு வருட காலத்திற்கு முன்பே இவ் அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டார் என்றும், வழக்கு நிலுவையில் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு

வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு முருகேச கவுண்டர் தான் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அசல் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் அதே காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பு வரி ரசீதுகள் இம்மனுவிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் மேற்படி ரசீதுகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இவ் அசல் வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தை சுவாதீனம் ஒப்படைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும், வீண் கால தாமதம் செய்ய வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.